Sri T. T. DANIEL : Sir, may I know what action the Government usually take when weavers are unable to pay back their loans?

The Hon. Sri R. VENKATARAMAN : Ordinarily persuasion.

Sri S. M. ANNAMALAI : ஸார், கூட்டுறவு இயக்கத்தில் சேராதவர்களிடமிருந்து கடன் வசூலிக்கப் படுகின்றன; அவர்களுக்கு, கூட்டுறவு இயக்கத்தில் சேர்ந்தவர்களைப் போன்று, கூட்டுறவு நன்மைகள் ஏற்படுவதில்லை; அப்படிப்பட்டவர்களிடமிருந்து கடன்களை வசூலிக்க குறைந்த பட்சம் இரண்டு ஆண்டுகள் தள்ளிப் போட சர்க்கார் முன் வருவார்களா?

The Hon. Sri R. VENKATARAMAN : கூட்டுறவு இயக்கத்தில் சேராதவர்களைப் பற்றி தனிக் கேள்விதான் போடவேண்டும்; அதைப் பரிசிலனை செய்து, சர்க்கார் வேண்டிய நடவடிக்கை எடுப்பார்கள்.

Sri M. S. SELVARAJAN : ஸார், துணி விலை அதிகமாகியிருப்பதன் காரணமாக, விற்பனைத் தேக்கம் ஏற்பட்டால், அத்தகைய தேக்கத்தைத் தவிர்க்க, அரசாங்கமே விற்பனைக்கு ஏற்பாடு செய்து இருப்பது உண்மையா?

The Hon. Sri R. VENKATARAMAN : இன்று அந்த விதமான நிலை இல்லை. மில் துணியை விட கைத்தறித் துணி மலிவாகவே இருக்கிறது, ஸ்டாக் அதிகமாக இல்லை, விற்பனையும் நடக்கிறது.

Sri A. A. RASHEED : Sir, may I know whether the Government have any information regarding the amount of loan due from the weavers in the North Arcot district?

The Hon. Sri R. VENKATARAMAN : A separate question may be put.

Bridge across Tambaraparani

* 317 Q.—**Sri D. S. AUTHIMOOLAM** : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether there is any proposal to construct a bridge between Viravanallur and Mukkudal, Tirunelveli district, across the river Tambaraparani; and

(*b*) if so, the stage at which the matter stands now?

The Hon. Srimathi LOURDHAMMAL SIMON : (*a*) No, Sir.
(*b*) Does not arise.

Sri D. S. AUTHIMOOLAM : ஸார், இந்த முக்கூடல் பகுதி, கைத்தொழில்கள் சம்பந்தப்பட்ட இடம்; 50,000 தொழிலாளர்களுக்கு மேல் வேலைசெய்யும் தொழில்களைக் கொண்ட இடம். சிறு கிராமம் ஆனாலும், அங்கே நிறைய வான்களும், லாரிகளும்

போக்குவரத்து உண்டு. ஆகவே, அப்பேர்ப்பட்ட வியாபார ஸ்தலம் என்ற முக்கியத்துவத்தை அனுசரித்து, அங்கே ஒரு அணை கட்டாவிட்டாலும், ஒரு "காஸ்வே" ஐயாவது கட்ட அரசாங்கம் நடவடிக்கை எடுப்பார்களா ?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : அணை கட்டுவது பற்றி கேள்வி கேட்டதால், ஒன்றுமில்லை என்று பதிலளித்தேன். முக்கூடலில் "காஸ்வே" கட்டுவது சம்மந்தமாக ஒரு ப்ரொபோசல், 1956-ல் கொண்டுவரப்பட்டது; அது டிஸ்ட்ரிக்ட் போர்ட் வேலையானதால், அது பரிசீலனையில் இருக்கிறது. டிவிஷனல் என்ஜினியர் (ஹைவேஸ் அண்ட் டிஸைன்ஸ்) இப்பொழுது பரிசிலனை செய்துக் கொண்டிருக்கிறார்.

SRI D. S. AUTHIMOOLAM : இப்பொழுது திருநெல்வேலி ஜில்லாவில் மேற்குப் பகுதியில் உள்ள அம்பாசமுத்திரம், திருநெல்வேலி தாலுகாக்கள் மேல்ச்செவல் என்ற இடத்தில் காஸ்வே கட்டவேண்டுமென்று தவறுதலாக சீப் என்ஜினியர் சிபாரிசு செய்திருந்தார்கள். அது சம்மந்தமாக மகஜர்களும் அனுப்பப்பட்டிருக்கின்றன, அதை ரத்துசெய்து, அதை முக்கூடலில் கட்ட வேண்டுமென்று. அது சம்மந்தமாக சர்க்கார் தீவிரமாக பரிசீலனை செய்ய முடியுமா ?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : தனிக்கேள்வி போடவேண்டும்.

MR. SPEAKER : கனம் மந்திரி பக்தவத்சலம் அவர்கள் இல்லாததால், அவர்கள் சம்பந்தப்பட்ட 318, 319 கேள்விகளை இன்னொரு நாளைக்கு எடுத்துக் கொள்ளலாம். அடுத்த கேள்வி, 320.

Poramboke lands

* 320 Q.—SRI P. G. MANICKAM : கனம் ரெவின்யு அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

ஹரிஜனங்கள் குடியிருந்துவரும் நத்தம் புறம்போக்கு நிலங்களை அவர்களுக்கே பட்டா செய்து கொடுக்க என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன ?

THE HON. SRI M. A. MANICKAVELU : The procedure prescribed in the Board's Standing Orders is followed in the matter of assignment of house-sites to Harijans, who are in occupation of house-sites in Natham porambokes. The Government have instructed all Collectors to take action in all cases of Harijan Nathams in the enjoyment of the caste Hindus, assign the sites to the Harijans, if the sites can be proved as lands at the disposal of the Government and if not, propose their acquisition for assignment to the Harijan occupants.

SRI P. G. MANICKAM : ஸார், மேற்கண்ட ஊர் நத்தமானது, ஹரிஜனங்களுக்குப் பட்டா செய்துக் கொடுக்காமல் இருப்பதால், அதை அவர்கள் பூரணமாக அனுபவிக்க முடியாமல்